பிரஸார் பாரதி
இந்திய வானொலி, சென்னை-4

05 04 2025 6 30

<u>தலைப்புச் செய்திகள்-</u>

1. இலங்கை கடற்படையினரால் கைது செய்யப்படும் மீனவர்கள் மற்றும் அவர்களது மீன்பிடி படகுகளை விடுவிப்பது தொடர்பாக இலங்கை அதிபரிடம், பிரதமர் திரு நரேந்திரமோடி வலியுறுத்தியுள்ளார்.
2. பிரதமர் நாளை திறந்து வைக்கும் புதிய பாம்பன் ரயில் பாலம் தமிழ் கலாச்சாரத்திற்கு பெருமை சேர்க்கும் வகையில் அமைந்துள்ளதாக மத்திய அமைச்சர் திரு அஸ்வினி வைஷ்ணவ் கூறியுள்ளார்,
3. ஒரே நாடு ஒரே தேர்தல் திட்டம் தேர்தல் செலவினங்களை கணிசமாக குறைக்கும் என்று மத்திய நிதி அமைச்சர் திருமதி நிர்மலா சீதாராமன் தெரிவித்துள்ளார்.
4. வக்ஃப் மசோதாவை சரியாக புரிந்து கொள்வதற்கு ஏதுவாக மத்திய சிறுபான்மையினர் விவகாரங்கள் துறை அமைச்சகம் சில விளக்கங்களை இன்று வெளியிட்டுள்ளது.
5. ஐ பி எல் கிரிக்கெட் போட்டியில் தில்லி அணிக்கு எதிரான ஆட்டத்தில் சென்னை அணி வெற்றிபெற 184 ரன் என்ற இலக்கு நிர்ணயிக்கப்பட்டுள்ளது.

<u>*---- இனி விரிவான செய்திகள் ---*</u>

**[]<<<>>>[]**

இலங்கையில் பயணம் மேற்கொண்டுள்ள பிரதமர் திரு நரேந்திரமோடி தலைநகர் கொழும்பில் அந்நாட்டு அதிபர் திரு அனுரா திச நாயகே-வுடன் இருதரப்பு பேச்சுவார்த்தைகள் நடத்தினார்.,

இந்த பேச்சுவார்த்தைகளுக்குப் பின் பாதுகாப்பு ஒத்துழைப்பு, மின் உற்பத்தி, இலங்கையின் கிழக்கு மாகாணத்திற்கு மானிய உதவி, சுகாதாரம் உள்ளிட்ட துறைகளில் பல்வேறு ஒப்பந்தங்கள் இன்று கையெழுத்தாகின.

திரிகோணமலையில் ஐக்கிய அரபு எமிரேட்ஸுடன் இணைந்து மேற்கொள்ளும் மின் உற்பத்தி திட்டமும், சாம்பூரில் 120 மெகாவாட் திறன் கொண்ட சூரிய மின் சக்தி திட்டத்தை செயல்படுத்துவதற்கான ஒப்பந்தங்கள் இரு தலைவர்கள் முன்னிலையில் கையெழுத்தாகின.

தம்புலாவில் தானிய சேமிப்பு கிடங்கு அமைப்பதற்கும், ஆன்மீகத் தலங்களில் ஐயாயிரம் சூரிய சக்தி மேற்கூரை அமைக்கும் திட்டங்களை மேற்கொள்வதற்கும் ஒப்பந்தங்கள் கையெழுத்தாகின.

முன்னதாக நடத்திய இருதரப்பு பேச்சுக்களில் இலங்கை அரசியல் சாசனம் 13-வது திருத்தத்தை முழுமையாக நடைமுறைப்படுத்த வேண்டுமென்றும், அதன் அடிப்படையில் மாகாண தேர்தல்கள் குறித்த காலத்தில் நடைபெறுவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டுமென்றும் திரு நரேந்திரமோடி இலங்கை அதிபரை கேட்டுக் கொண்டார்.

இந்திய பெருங்கடல் பகுதியில் பாதுகாப்பு ஒத்துழைப்பை மேம்படுத்துவது குறித்தும் விவாதிக்கப்பட்டது.

இலங்கை கடற்படையினரால் கைது செய்யப்படும் மீனவர்களை உடனடியாக திருப்பி அனுப்பவும், அவர்களின் மீன்பிடி படகுகளை ஒப்படைக்கவும், மனிதாபிமான அடிப்படையில் நடவடிக்கை எடுக்க வேண்டுமென்றும் பிரதமர் கேட்டுக் கொண்டார்.

வரும் நாட்களிலும் இருதரப்பு விஷயங்களை பகிர்ந்து கொள்வதற்கும் இரு நாடுகளும் உறுதிபூண்டுள்ளதாகவும் இரு தலைவர்களும் தெரிவித்தனர்.

முன்னதாக இன்று காலை இலங்கையில் உள்ள தமிழ் அமைப்புகளின் தலைவர்களை திரு நரேந்திரமோடி சந்தித்து பேசினார்.

இலங்கையில் உள்ள தமிழ் மக்கள் கண்ணியத்துடன் நடத்தப்பட வேண்டும் என்பதில் இந்தியா உறுதி பூண்டுள்ளதாக பிரதமர் அப்போது தெரிவித்தார்.

அவர்களுக்கு சம உரிமை மற்றும் நீதி கிடைக்க வேண்டுமென்றும் இந்தியா விரும்புவதாக திரு நரேந்திரமோடி குறிப்பிட்டார்.

[]<<<>>>[]

ராமேஸ்வரத்தில் நவீன தொழில்நுட்பத்துடன் கட்டப்பட்டுள்ள பாம்மன் ரயில் பாலத்தை பிரதம் திரு நரேந்திரமோடி நாளை திறந்து வைப்பது நாட்டின் வரலாற்றில் முக்கிய மைல் கல்லாக திகழும் என்று ரயில்வே அமைச்சர் திரு அஸ்வினி வைஷ்ணவ் தெரிவித்துள்ளார்.

சென்னை விமான நிலையத்தில் இன்று செய்தியாளர்களிடம் பேசிய அவர், செங்குத்தாக மேலெழும்பும் வகையில் அமைக்கப்பட்டுள்ள இந்த பாலம் தமிழ் காலாச்சாரத்தையும், தொன்றுதொட்ட நாகரீகத்தையும் சிறப்பிக்கும் வகையில் அமைந்துள்ளதாக கூறினார்.

பிரதமர் திரு நரேந்திரமோடியின் வழிகாட்டுதலின்படி கலைநுட்பத்துடன் வடிவமைக்கப்பட்டுள்ள இந்த பாலம் தமிழகத்திற்கும், தமிழ் மொழிக்கும் பெருமை சேர்க்கும் வகையில் அமைந்துள்ளதாகத் தெரிவித்தார்.

இன்று ராமேஸ்வரம் செல்லும் மத்திய அமைச்சர் திரு அஸ்வினி வைஷ்ணவ், நாளை பாம்பன் புதிய பாலத்தை பிரதமர் திறந்து வைப்பதற்கான முன்னேற்பாட்டுப் பணிகளை பார்வையிடுகிறார்.

பிரதமரின் வருகையையொட்டி ராமேஸ்வரத்தில் கூடுதல் பாதுகாப்பு போடப்பட்டுள்ளது.

மூவாயித்துக்கும் மேற்பட்ட காவல்துறையினர் பாதுகாப்புப் பணியில் ஈடுபட்டுள்ளனர்.

[]<<<>>>[]

தேர்தல் செலவினங்களை கணிசமாக குறைக்கும் நோக்கிலேயே ஒரே நாடு ஒரே தேர்தல் திட்டம் கொண்டுவரப்பட உள்ளதாக மத்திய நிதி அமைச்சர் திருமதி நிர்மலா சீதாராமன் தெரிவித்துள்ளார்.

சென்னையை அடுத்த காட்டாங்குளத்தூரில் தனியார் நிகர்நிலை பல்கலைக்கழகத்தில் இன்று நடைபெற்ற அது தொடர்பான கலந்துரையாடல் நிகழ்ச்சியில் அவர் பங்கேற்று பேசினார்.

பத்து ஆண்டுகளுக்கும் மேலாக ஒரே நாடு ஒரேதேர்தல் குறித்து பேசப்பட்டு வரும் நிலையில், இது இறுதி வடிவம் பெற்று 2030-ஆம் ஆண்டுக்குப் பிறகே நடைமுறைக்கு வரும் என்று கூறினார்.

மக்களவைக்கும், மாநில சட்டப்பேரவைகளுக்கும் ஒரே நேரத்தில் தேர்தல் நடைபெற்றால் நாட்டின் பொருளாதார வளர்ச்சிக்கு பெரிதும் உதவிகரமாக இருக்கும் என்று திருமதி நிர்மலா சீதாராமன் தெரிவித்தார்.

**[]<<<>>>[]**

வக்ஃப் மசோதாவை சரியாக புரிந்து கொள்வதற்கு ஏதுவாக மத்திய சிறுபான்மையினர் விவகாரங்கள் துறை அமைச்சகம் சில விளக்கங்களை இன்று வெளியிட்டுள்ளது.

ஏற்கனவே உள்ள சொத்து சட்டத்தின்படி பதிவு செய்யப்பட்ட வக்ஃப் வாரிய சொத்துக்களை எக்காரணம் கொண்டும் திரும்பப்பெறப்பட மாட்டாது என்று தெளிவுபடுத்தப்பட்டுள்ளது.

ஒருமுறை வக்ஃப் சொத்தாக அறிவிக்கப்பட்ட எதையும் அந்த வாரியததின் நிரந்தர சொத்தாகவே பராமரிக்கப்படும் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

வக்ஃப் வாரியத்தின் இதர சிறுபான்மை சமூகத்தினரும் உறுப்பினராகலாம் என்றும், பெரும்பான்மை சமூகத்தினருக்கு அனுமதி இல்லை என்றும் தெளவுபடுத்தப்பட்டுள்ளது.

வக்ஃப் வாரிய சொத்துக்களை நிர்வகிப்பது தொடர்பான விஷயங்கள் மட்டுமே புதிய மசோதாவில் இடம்பெற்றுள்ளது.

வக்ஃப் வாரியத்துக்கு தாமாக முன்வந்து சடடப்பூர்வமாக அளிக்கப்படும் சொத்துக்கள் புதிய விதிமுறையின் கீழ் கொண்டுவரப்படும்.

அரசின் சொத்துக்கள் வக்ஃப் சொத்தாக தவறாக முறைப்படுத்தப் பட்டிருந்தால் அது குறித்து மாவட்ட ஆட்சியர் நிலையிலான அதிகாரி மட்டுமே ஆய்வு செய்யலாம் என்றும், ஆனால் அந்த சொத்துக்களை மீண்டும் சட்டப்பூர்வமாக ஆர்ஜிதம் செய்வதற்கு புதிய மசோதாவில் வழிவகை செய்யப்படவில்லை என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

**[]<<<>>>[]**

நாட்டின் மொத்த உள்நாட்டு உற்பத்தியில் தமிழகத்தின் பங்கு ஒன்பது சதவீதமாக உள்ளது என்று மாநில நிதி அமைச்சர் திரு தங்கம் தென்னரசு தெரிவித்துள்ளார்.

தூத்துக்குடியில் இன்று புதத்தாக்க தொழில்முனைவோரை ஊக்குவிக்கும் நிகழ்ச்சியில் கலந்து கொண்ட பின் செய்தியாளர்களிடம் பேசிய அவர், மத்திய புள்ளியியல் துறை தமிழகத்தின் வளர்ச்சி ஒன்பது புள்ளி ஆறு சதவீதமாக உயர்ந்திருப்பதாக மதிப்பீடு செய்துள்ளது என்று கூறினார்.

[]<<<>>>[]

இலங்கையில் தமிழர்களுக்கு பத்தாயிரம் வீடுகள் கட்டித்தரப்படும் என்ற பிரதமரின் அறிவிப்பை வரவேற்பதாக விடுதலை சிறுத்தைகள் கட்சியின் தலைவர் திரு தொல் திருமாளவன் தெரிவித்துள்ளார்.

அரியலூர் மாவட்டம் காட்டத்தூரில் செய்தியாளர்களிடம் பேசிய அவர், இலங்கையில் உள்ள தமிழ் மக்களின் உணர்வுகளை மதிக்கின்றன வகையில் அவர்களின் கோரிக்கைகளை அந்நாட்டு அரசு நிறைவேற்ற பிரதமர் வலியுறுத்த வேண்டுமென்று கேட்டுக் கொண்டார்.

[]<<<>>>[]

காஞ்சிபுரம் மாவட்ட வளர்ச்சிக்கான ஒருங்கிணைப்பு மற்றும் கண்காணிப்புக் குழுக் கூட்டம் அதன் தலைவரும், நாடாளுமன்ற உறுப்பினருமான திரு டி ஆர் பாலு தலைமையில் ஆட்சியர் அலுவலகத்தில் நடைபெற்றது. இந்த கூட்டத்தில் மாநில அமைச்சர் திரு ஆர் காந்தியும் பங்கேற்றார்.

[]<<<>>>[]

விழுப்புரம் டாக்டர் எம் ஜி ஆர்அரசு மகளிர் கலைக்கல்லூரில் 971 மாணவிகளுக்கு வனத்துறை அமைச்சர் திரு பொன்முடி இன்று பட்டங்களை வழங்கினார்.

[]<<<>>>[]

நெல்லை மாவட்டம் திசையன்விளை மற்றும் அதன் சுற்று வட்டாரப்பகுதிகளில் உள்ள தாது மணல் ஆலை உரிமையாளர்கள் அலுவலகங்களில் சிபிஐ அதிகாரிகள் இன்று சோதனை நடத்தினர்.

[]<<<>>>[]

ஐ பி எல் கிரிக்கெட் போட்டியில் தில்லி அணிக்கு எதிரான ஆட்டத்தில் சென்னை அணி வெற்றிபெற 184 ரன் எடுக்க வேண்டும் என்ற இலக்கு நிர்ணயிக்கப்பட்டுள்ளது.

சென்னையில் நடைபெற்று வரும் இப்போட்டியில் டாஸ் வென்று முதலில் ஆடிய தில்லி அணி நிர்ணயிக்கப்பட்ட 20 ஓவரில் 183 ரன்னுக்கு ஆட்டமிழந்தது.

184 ரன் எடுத்தால் வெற்றி என்ற இலக்குடன் தற்போது ஆடி வரும் சென்னை அணி சற்று முன் வரை 11 ஓவரில் 5 விக்கெட் இழப்புக்கு –76 ரன் எடுத்துள்ளது.

***End of News***